வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க..எண்.3133/ஆ5/2025, நாள். /09/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளி மாணவர்களுக்கு இடையேயான சாதிய ரீதியான மோதல்களை தடுக்கவும் மாணவர்களிடையே சமத்துவம், சமூகநீதி மற்றும் ஒற்றுமை எண்ணங்களை வளர்க்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள – அறிவுறுத்தல் – சார்பு

பார்வை
1. அரசாணை நிலை எண். 152 (பொது1(2)) துறை நாள். 23.08.2023
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.053643/எம்1/இ1/2024, நாள். 25.06.2025
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 02.07.2025
4. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.053643 /எம்1/இ1/2025, நாள். 03.09.2025

.....

பார்வை 1ல் காணும் அரசாணையில் பள்ளி மாணவர்களிடையே சாதி இன உணர்வுகள் காரணமாக உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும் வழிமுறைகளை வகுக்கவும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு கே. சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து அரசால் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து ஒரு நபர் குழுவானது தனது அறிக்கையினை 18.06.2025 அன்று அரசுக்கு சமர்பித்துள்ளது.

ஒரு நபர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையினை, 18.08.2025 அன்று அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டிய பரிந்துரைகளின் மீது உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் சாதி ரீதியான மோதல்களை தவிர்க்கவும், மாணவர்களிடையே ஒற்றுமையை பேணவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே பார்வை 2ன் படி பெறப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை 3ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) மற்றும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஒருநபர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட, சில பரிந்துரைகளின் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை 4ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கீழ்கண்ட தலைப்புகளின் பெயரில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

- பள்ளிகளில் சாதிய ரீதியான பாகுபாடு (Action against communal bias in schools)
- சாதிய அடையாளங்களை மந்தனமாக வைத்திருத்தல் (Confidentiality of Caste Identity)
- மகிழ் முற்றம் (Maghizh Muttram Programme)
- பள்ளிகளில் மாணவர்களுக்கு தொலைபேசி பயன்பாட்டுக்கு தடை (Ban of Mobile Phones in Schools)
- அறநெறி வகுப்புகள் (Araneri Classes)
- மாணவர் மனசு (Student Grievance Boxes)

எனவே இணைக்கப்பட்டுள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுமுறைகளை கவனமாக பின்பற்றி பள்ளிகளில் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

மேலும் பள்ளிகளை பார்வையிடும் போது இப்பொருள் சார்பாக ஆய்வு செய்து அதன் அறிக்கையினை இவ்வுவலகத்தில் சமர்பிக்க மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு –
பார்வை 4ல் காணும் செயல்முறைகள்

18.09.25 முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
   அனைத்து வகை பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்–
சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.